**ஊழல் எதிர்ப்பு இயக்கம் பதிவு எண் 349/2001**

**<u>2022-23 நிதி ஆண்டிற்கான 21வது பொது குழுக்கூட்டம்</u>**

**இடம்: பல்நோக்கு சமூகப் பணி மையம், திருச்சி கன்டொன்மென்ட்-626001**

**நாள் : 23 ஜுலை 2023**

## <u>2022-2023 ம் ஆண்டு அறிக்கை</u>

இயக்க செயற்குழுவின் சார்பாக பொதுக்குழுவில் இயக்க பொதுச் செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆண்டு அறிக்கை பின்வருமாறு:-

**1. இயக்க கட்டமைப்பு நிர்வாகம் மற்றும் செயல்பாடுகள்**:

22 ஆண்டுகள் முடிந்து 23ம் ஆண்டில் அடி எடுத்து வைத்துள்ளோம். தற்போது 5 மாவட்டங்களும், 8 கிளைகளும் உள்ளன. தற்போது நமது இயக்கத்தில் 589 ஆயுள் உறுப்பினர்களும் 129 ஆண்டு உறுப்பினர்களும் உள்ளனர். இயக்கத்திற்கு உரிய நிர்வாகத்துடன் இயக்கம் தமது லட்சியத்தை நோக்கி தொடர்ந்து நடைபோட்டுக்கொண்டு வருகிறது. முன்னேறும் வேகத்தில் தொய்வு இருப்பினும், கொள்கையில் பிடிப்புடன் செயல்பட்டு வருகிறோம் நமது லட்சியத்தை விரைவில் அடைவதில் தொடர்ந்து செயல்படுவோம். இயக்கக் கொள்கைவழியில் சுயநலம் இன்றியும் செயல்பட ஆர்வமுள்ள இளைஞர்களும் பணிஓய்வு பெற்ற ஆர்வலர்களும் நிர்வாகிகளாக வரவேண்டும். இங்கு வந்து முழுமூச்சுடன் உழைத்தால் கண்டிப்பாக நாம் நமது இலக்கை அடைவது சுலபம். அதற்கான முயற்சிகளை நாம் செய்ய வேண்டும் இயக்கத் தலைமையகம் சென்னையில் ஒரு பகுதி நேர (காலை 10.00 மணி முதல் 5.00 மனி வரை) ஊழியருடன் (மாத சம்பளம் ரூ.5000/-). செயல்படுகிறது. 2007ம் ஆண்டு முதல் இன்று வரை எண்.155, கொன்னூர் நெடுஞ்சாலையில், மறைந்த இயக்க துணைத் தலைவர் திரு.வி.ஆர்.சந்திரன் அவர்கள் கட்டிடத்தில், அவரது கருணையால் செயல்படுகிறது அவருக்கு மனமார்ந்த நன்றியினை இயக்கம் சார்பாக இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

**2. இயக்க நிதிநிலை**:

எந்த இயக்கமும் நிதிநிலை சீராக இல்லையேல் செயல்பட இயலாது. இயக்க ஆயுள் உறுப்பினர் வைப்பு நிதியிலிருந்து நமக்கு வந்த வட்டியில் இருந்து எடுத்து செலவிடப்பட்டுள்ளது. வைப்பு நிதி அனைத்தும் கூடுதலாக வட்டி தரும் தமிழ்நாடு பவர் பைனாஸ் கார்பரேஷனில் வைப்பு நிதியாக வைக்கப்பட்டுள்ளது. வரவு/செலவு கணக்கை ஆண்டு தோறும் எக்கட்டணமும் பெறாமல் தணிக்கை செய்துதரும் திரு,சி.என்.ஜெயசந்திரன் ஆடிட்டர் அவர்களுக்கும் மற்றும் பங்குதாரர் திருமதி.ஆர்.மகேஷ்வரி அவர்களுக்கும் நாம் நன்றியை தெரிவித்து கொள்கிறோம். இதே போன்று அனைதது மாவட்டங்களும் வரவு செலவு கணக்குகளைத் தாக்கல் செய்ய வேண்டும். 2022-23ம் ஆண்டுக்கான வரவு செலவு கணக்குகளை எந்த ஒரு மாவட்டமோ, அல்லது கிளையோ இதுவரை தாக்கல் செய்யவில்லை என்பதை மிகவும் வருத்ததுடன் தெரிவித்துக்க் கொள்கிறேன். அனைத்து மாவட்டங்கள் மற்றும் கிளைகளிலும் பணப்பதிவேடு முறையாக பின்பற்ற வேண்டும்.

இயக்கத்தில் மாவட்ட கிளைகள் மற்றும் கிளைகளின் அங்கத்தினர்களின் எண்ணிக்கை குறைவின்றி இருக்கவும் ,இந்த கிளைகளின் நிர்வாகிகளின் தேர்தலை உடன் நடத்தவும் எடுக்கப்பட்ட நடவடிக்கையால், எல்லா மாவட்டங்களிலும் முறைப்படி தேர்தல்கள் நடத்தி முடிக்கபட்டுள்ளது. ஆனால், இயக்கத்தில் சில மாவட்டங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவால் தஞ்சாவூர் மாவட்டம் மாவட்டத்தகுதியை இழக்கின்றது. திருவள்ளூர் கிளை என்ற தகுதியை இழக்கின்றது. அந்தந்த மாவட்ட மற்றும் கிளைகளின் தலைவர்கள் போதுமான உறுப்பினர்களைச் சேர்த்துத் தகுதி இழக்காமல் மேலும் முன்னேற்றம் பெற முயற்சி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். புதிய மாவட்டங்கள் /கிளைகளை ஏற்படுத்தியும் வளர்ச்சிக்கு வித்திடுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

3. **ஊழல் ஒழிப்பில்**:

- அமைச்சர் செந்தில் பாலாஜி மீதும் ஊழல் வழக்குகள் (முன்னாள் போக்குவரத்து துறை அமைச்சராக இருந்த போது நடந்த ஊழல் ) பொது நல வழக்காகப் போடப்பட்டுள்ளது. நமது இயக்கம் அமைச்சர் செந்தில் பாலாஜியை எதிர்த்து உச்ச நீதிமன்றம் சென்று

வழக்காடி வெற்றி பெற்றுள்ளதை நினைத்து நமது இயக்கம் பெருமைப் படுகிறது. இந்த வழக்கின் வெற்றிக்குப் பாடுபட்டவர்களையும், இலவசமாக வாதாடிய உச்ச நீதிமன்ற வழக்கறிஞர்கள் திரு பிரசாந்த் பூசன், திரு பிரணாப் சச்தேவா மற்றும் ஐடின் பரத்வாஜ் அவர்களையும் இயக்கத்தின் சார்பாக பாராட்டி நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- நெடுஞ்சாலைத்துறையில் டெண்டர் விடுவதில் நடந்திருக்கும் முறைகேடுகளை வெளிச்சத்திற்கு கொண்டு வர சேலம் உட்பட 8 மாவட்ட நெடுஞ்சாலைத்துறை கண்காணிப்பு பொறியாளர்களிடம் இருந்து ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குரிய டெண்டர்களையும் அது சம்பந்தமான கோப்புகளையும் ஆர்.டி.ஆர்.ஆக்ட் 2005- சட்டத்தின் கீழ் கோரியிருந்தோம். இதில் ஒரு சில மாவட்டங்கள் தர மறுத்துவிட்டது. ஒரு சில மாவட்டங்கள் கோரிய விவரங்களை சரியாக அளிக்கவில்லை . இவைகள் குறித்து முறையாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தகவல் அறியும் சட்ட ஆணையரிடம் முறையிடப்பட்டு கரூர் மாவட்டத்திலிருந்து சில ஆவணங்கள் கிடைக்கப்பட்டன. அவைகளைப் படித்துப் பார்த்ததில் சில முறையீடுகள் நடந்ததெனத் தெரிகிறது. அதைக் கொண்டு முறைபடியான மனுவோ, அல்லது வழக்கு பதிவு செய்யவோ நமது சட்ட ஆலோசகர் திரு சுப்ரமணியன் அவர்களிடம் கொடுக்கப்ப்பட்டுள்ளது.
- விதிமுறைகளை மீறி இலஞ்ச ஊழலின் விளைவாகக் கட்டப்பட்ட கட்டிடங்களை ஒரு தொகையை பெற்றுக்கொண்டு வரைமுறைப்படுத்த அரசு பிறப்பித்த விதிகள் திருத்தத்தை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, அது நிலுவையில் உள்ளது. என்பதனை தெரிவித்துகொள்கிறோம்..
- நீதிமன்ற வாய்தா கேட்கும் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டி ஒரு வடிவ மனுவைத் (Draft Petition) நமது செயலாளர் (சட்டம்) திரு அ. நஃபீஸ் அஹமத் கூடிய விரவில் தயாரிக்கவிருக்கிறார்.
- தஞ்சாவூர் மாவட்ட உறுப்பினர் திரு குணசேகரன் அவர்கள் கொடுத்த மாவட்டக் கல்வி அதிகாரியின் மேலுள்ள ஊழல் புகார் பற்றி நமது சட்ட ஆலோசகரும் , நமது செயலாளரும் சேர்ந்து அடுத்த கட்ட செயல் முறை பற்றி முடிவெடுப்பார்கள்.

4. **சட்ட வழக்குகள் நிதி:**

ஊழல் சம்பந்தமாக நமது இயக்கம் பொதுநலவழக்கு தொடர இருக்கிறோம். தற்போது அமைச்சர் செந்தில் பாலாஜி மீது வழக்கு தொடரப்பட்டு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இது போன்ற செயல்களுக்கு அதிகமாக பணம் தேவைபடுகிறது. அதற்காக சட்ட வழக்கு நிதிக்க நன்கொடை வசூலிக்க முடிவெடுக்கப்பட்டு .நடைமுறையில் உள்ளது. சென்ற ஆண்டு இதற்காக ரூ 1,29,000/- கிடைக்கப்பெற்றோம். மற்ற நன்கொடைகளின் மொத்த\த் தொகை ரூ 31,000/- ஆகும். நமது இயக்க உறுப்பினர்கள் தாராளமாக நிதி வழங்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். நன்கொடைகளுக்கு வருமான வரி விலக்கு உள்ளது.

**5 நேர்மை நெறி:** :

நம் இயக்கத்தின் ஜெயபேரிகையாக இருக்கும் நேர்மை நெறி மாதாந்திர இதழ் வெளியிடுவது குறித்து டெல்லி ஆர்.ன்.ஐ. அலுவலகத்திடம் இருந்து தற்போது உள்ள நிர்வாகிகளின் பெயர் மாற்றம் செய்து ஆறிக்கை பெறப்பட்டு உரிய தபால் அனுமதியுடன் செயல் பட உள்ளோம்.

**6. வேண்டுகோள் :**

நாம் திறமைசாலியாக இல்லாமல் இருக்கலாம்.நமது லட்சியத்தை அடைய பலவருடங்கள் ஆகலாம்.. ஆனால்.என்றுமே நமது உறுப்பினர்கள் நேர்மையும் ஒழுக்கமும் கேள்விகுறியாகக் கூடாது. என்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும்.என்று பொதுகுழு உறுப்பினர் களை இருகரம் கூப்பி கேட்டுக் கொள்கிறோம்.

**வாழ்க ஊழல் எதிர்ப்பு இயக்கம்**

பொதுச்செயலர்

மாநில செயற்குழு